

ஆசிரியரிடமிருந்து........!

# கனிதரும் வாழ்வு

கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசுவை பின்பற்றும் ஒவ்வொருவரும் கனியுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். கனி நிறைந்த வாழ்க்கை ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைக் காட்டுகிறது. நம்முடைய வாழ்க்கை ஆவியின் கனிகள் நிறைந்ததாக இருக்க வேண்டும். கனிகொடுத்தல் குறித்த வேதம் கூறும் சில காரியங்களை இங்கு உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

### 1. கனி கொடுத்தல் என்றால் என்ன?
### The PURPORT of Bearing Fruit

பரிசுத்த வேதாகமம் புதிய ஏற்பாட்டில் கனி கொடுத்தல் என்றால் என்ன என்பதற்கு சில பதில்களை நமக்குத் தருகிறது. **முதலாவது,** நமது நற்குணங்கள் கனிகளுக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது. ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா.5: 22, 23). மேலும் 2 பேதுரு 1:5-8 வசனங்களில் சில குணங்கள் கூறப்பட்டுள்ளன. இத்தகைய நற்குணங்கள் நமக்குள் காணப்படுமானால் நாம் கனி கொடுக்கிறோம் என்று அர்த்தம் (எபே.5:9). **இரண்டாவதாக,** நமது நற்கிரியைகள் கனி கொடுத்தலுக்கு ஒப்பாக இருக்கிறது.வேதம் சகலவித நற்கிரியைகளாகிய கனிகளைத் தந்து என்று கூறுகிறது (கொலோ. 1:10). "நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி நற்கிரியைகளைச் செய்யப் பழகட்டும்" என்று பவுல் கூறுகிறார் (தீத்து 3:14). **மூன்றாவதாக,** நற்செய்தி அறிவித்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது கனி தருவதாகும் (யோவான் 15:16; நீதி.11:30; ரோமர் 1:13). ஆகவே நற்குணங்கள், நற்கிரியைகள், நற்சாட்சி அறிவித்தல் ஆகிய காரியங்கள் நம்மில் காணப்படும்போதுதான் நாம் கனிதரும் கிறிஸ்தவர்களாக இருக்க முடியும்.

### 2. கனி கொடுத்தலின் நோக்கம் என்ன?
### The PURPOSE of Bearing Fruit

நாம் ஏன் கனி கொடுக்க வேண்டும் என்பதற்கு வேதாகமம் நமக்குத் தெளிவான பதில் கொடுக்கிறது. **முதலாவது,** கனி கொடுத்தல் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிறது. இயேசு சொன்னார், "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்'' (யோவான் 15:8).



**இரண்டாவதாக,** நாம் கனி கொடுக்கும்படியாக தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம் (யோவான் 15:16). நாம் ஒரு மரத்தை நட்ட பின் அதில் கனியை எதிர்ப்பார்ப்பது போல தேவனும் நம்மில் கனியை எதிர்பார்க்கிறார் (லூக்கா 13 : 6-9). கனி கொடாவிட்டால் தேவனுடைய தண்டனை நம்மேல் வரும் (யோவான் 15:2,6) **மூன்றாவதாக,** ஒரு கிறிஸ்தவனை அடையாளம் கண்டுகொள்ள கனிகள் அவசியம். எந்த மரமும் கனியினால் அறியப்படுவதுபோல, ஒரு கிறிஸ்தவனும் தன்னுடைய கனியினால் தான் அறியப்படுவான் என்று வேதம் கூறுகிறது (மத்தேயு 7:20; 12:33).

## 3. கனிகளை கொடுக்க என்ன செய்ய வேண்டும்?
## The PRECONDITIONS for Bearing Fruit

நாம் கனியுள்ளவர்களாய் மாற கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்ற வேண்டுமென்று வேதம் நமக்குப் போதிக்கிறது.

1. **கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும்.** "ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்" என இயேசு சொன்னார் (யோவான் 15:5). யோவான் 15:1-10 வசனங்களில் "நிலைத்திருத்தல்" என்ற வார்த்தை 10 முறை வருகிறது. நிலைத்திருத்தல் (Abiding) என்றால் தேவனோடு நெருங்கிய பிரியாத உறவு கொள்ளுதலாகும்.

2. **ஆவியினால் நிறைந்திருக்க வேண்டும்.** ஆவியின் கனி கொடுக்க ஆவியானவரின் உதவி மிகவும் அவசியம் (எபே. 5:18; கலா. 5:22,23). வேதம் கூறுகிறது, "ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமை அடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரி. 3:18).

3. **சுயத்திற்கு மரிக்க வேண்டும்.** வேதம் சொல்லுகிறது, "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (யோவான் 12:24). தேவ ஆவியினால் நிரப்பப்பட்டுக் கனிகொடுக்க, மாம்சத்தை தினமும் சிலுவையில் அறைந்து சுயத்திற்கு அனுதினமும் சாகவேண்டும் (கலா. 5:24).

4. **வேதத்தை தியானித்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.** கர்த்தருடைய வேதத்தில் இரவும், பகலும் தியானமாய் இருக்கிற மனுஷன், நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைக் கொடுக்கும் மரத்தைப் போல் இருப்பான் என்று வேதம் கூறுகிறது (சங். 1: 2,3).

5. **சபை ஐக்கியம் வேண்டும்.** திருச்சபையிலுள்ள பரிசுத்தவான்களின் ஐக்கியமும், போதனையும் நாம் கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சி அடைவதற்கும், கனிதருவதற்கும் மிகுந்த அவசியம் (அப். 2: 42-44).

6. **தேவன் மேல் எப்பொழுதும் நம்பிக்கையும் விசுவாசமும் வேண்டும்.** கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் தப்பாமல் எப்பொழுதும் கனி கொடுக்கிற மரத்தைப் போலிருக்கிறான் என்று வேதம் கூறுகிறது (எரே. 17: 8).

7. **தேவன் நம்மைப் பரிசுத்தமாக்க இடமளிக்க வேண்டும்.** தேவன் நம்மைத் தம்முடைய வார்த்தையின் மூலமாகவும் (எபி. 4:12; யோவான் 15:2), உபத்திரவங்களின் மூலமாகவும் (எபி. 12:11; யோபு 23:10) நம்மைப் புடமிட்டுப் பரிசுத்தமாக்க விரும்புகிறார். நாம் இச்சமயங்களில் முறுமுறுக்காமல் அவரைத்

துதித்து அவர் தம்முடைய கிரியையை நம் வாழ்வில் நிறைவேற்ற இடமளிக்கும் போது நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்க முடியும்.

### 4. கனி கொடுத்தலின் ஆசீர்வாதங்கள்
### The PROMISE for Bearing Fruit

நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்து கனி கொடுக்கும் போது, அவருடைய உண்மை சீஷர்களாய் மாறுகிறோம் (யோவான் 15:8). நாம் கனியுள்ளவர்களாய் மாறும்போது தேவன் நமக்கு அநேக ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணுகிறார். அவைகளில் சிலவற்றை யோவான் 15-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். **முதலாவது**, நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலைத் தருகிறார். நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (15:7). **இரண்டாவதாக**, தேவன் தம்முடைய அளவற்ற ஆச்சரியமான அன்பை நம்மேல் காண்பித்து நம்மை ஆசீர்வதிக்கிறார் (யோவான் 15:9). **மூன்றாவதாக,** நிலையான மற்றும் நிறைவான சந்தோஷத்தை நமக்கு தருகிறார் (யோவான் 15 : 11).

### 5. கனி கொடுக்காவிட்டால் வரும் தண்டனை
### The PUNISHMENT for not Bearing Fruit

நல்ல கனி கொடாதிருக்கிற மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும் என்று இயேசு கூறினார் (மத்.3:10). ஒவ்வொரு நாளும் இயேசு நம்மில் கனியை எதிர்பார்க்கிறார் (லூக்கா 13:6). கனிகளை நாம் கொடாவிட்டால் தேவனுடைய தண்டனைக்குப் பாத்திரமாக மாறி விடுகிறோம் (லூக்கா13:7; யோவான் 15:2,6: மத்.21:19). உலகக் கவலை, சிற்றின்பங்கள், ஐசுவரியத்தின் மயக்கம் (லூக்கா 8:14), துன்மார்க்கரோடு உள்ள ஐக்கியம் (சங்.1:1-3) ஆகிய இவைகள் நம்மைக் கனியற்றவர்களாக மாற்றுகிறது. ஆகவே நாம் தேவனுடைய தண்டனைக்குத் தப்ப இவைகளிலிருந்து முற்றிலுமாக விடுதலை பெற்று, கிறிஸ்துவிலும் அவருடைய வசனத்திலும் ஆழமாக நிலைத்திருந்து கனிகொடுக்கத் தீர்மானிப்போம்! தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்! நம்மில் மகிமைப்படுவார்! அல்லேலூயா!.

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி

---

**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள
நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102